<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு  நீதிபதி.</u>
**<u>MCOP.No.193/2024</u>**

பெயர் : சுந்தரி (PW–1)

க/பெ. : சுந்தரம்

தேதி : 26.03.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

இந்த விபத்தில் இறந்துபோனது யார் என்றால் எனது மகன் ஆவார்,. விபத்து சம்பந்தமாக எனது கணவர் சுந்தரம் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் விபத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் தகவல் கிடைத்து சென்று பார்த்ததாகவும் கூறியுள்ளார் என்றால் சரிதான். விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அங்கேயே சிகிச்சையின்போது பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக அவர் சிகிச்சை பெற்று இறந்தார் என்றால் சரிதான்.  3 மற்றும் 4 ம் மனுதாரர்கள் திருமணம் ஆகி அவரவர் கணவர்ருடன் வசித்து வருகிறார்கள். எனது மகன் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான PY 02 W 5182 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றார்., அவருடன் யாரும் பயணம் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் விபத்தின்போது ஓட்டிச்சென்ற வாகனம் அவருக்கு சொந்தமான வாகனம் அல்ல.

விபத்து சமயத்தில் எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான்.  அதனால் தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.7ல் Without D.L. என குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பொறையார் காவல் நிலையத்தில் முழுமையாக விசாரணை செய்து மேற்படி வழக்கின் இறுதி அறிக்கையில் இறந்துபோன விக்னேஷ் என்பவர் அதிவேகமாகவும். அஜாக்கிரதையாகவும் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்று தானே கீழே விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டு இறப்பு நிகழ்ந்துள்ளது என்று வழக்கை Charge Abate ஆக பாவித்து இறுதிஅறிக்கையை சமர்ப்பித்துள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு

தெரியாது. இவ்வழக்கில் யாரிடம் நஷ்ட ஈடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் விபத்தின் போது எனது மகன் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்புறுதி நிறுவனத்திடம் தான் கேட்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.8 காப்பீட்டு பாலிசியின் OD coverage மற்றும் personal Accident to Owner Driver மற்றும் PA to unnamed passenger coverage மற்றும் 23.08.2023 முதல் 22.08.2024 வரை நிலுவையில் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது மகன் எடுத்துச்சென்ற வாகனத்தினைப் பொறுத்து அவர் 3ம் நபர் என்றால் சரிதான். அதுபோல அவர் அந்த வாகனத்தில் பின்னால் அமர்ந்து செல்லவில்லை என்றும் அவர் ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் காப்பீட்டு பாலிசி எனது மகன் பெயரில் இல்லை. அதன் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரரான சதீஷ்குமார் பெயரில் உள்ளது.

நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள காப்பீட்டு பாலிசியில் எனது மகன் 3ம் நபரும் அல்ல, வாகனத்தில் பயணம் செய்தவரும் அல்ல, வாகனத்தின் உரிமையாளரும் அல்ல என்பதால் அவர் இந்த பாலிசியில் coverage ஆகமாட்டார் என்றால் சரியல்ல. Personal Accident coverage என்பது காப்பீடு நிறுவனத்திடம் நேரடியாக அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்து claim செய்துகொள்ள வேண்டும் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. எனது மகனுக்கு விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் இல்லாத காரணத்தினால் Personal Accident coverage claim கோர இயலாது என்றால் சரியல்ல. இந்த வாகனத்தை பொறுத்து உரிமையாளர் அல்லாத ஓட்டுனருக்கு காப்பீடு ம.சா.ஆ.8ன் படி உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கு முழு காரணமும் எனது மகனின் அஜாக்கிரதையும், மற்றும் அதிவேகமும் தான் காரணம் என்று காவல் துறையில் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் உள்ளது என்றால் அவன் அவ்வாறு செல்லமாட்டான். நாங்கள் நஷ்ட ஈடு கோருவது மசாஆ8 ன் படி அதில் உள்ள காப்பீட்டின்படி என்றால் சரிதான். எனது மகன் என்ன வேலை பார்த்து வந்தான் என்றால் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார் என மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகன் மீன்பிடித்தொழில் செய்து வந்தான் என்று நிரூபிக்க நலவாரியம் அல்லது மீனவர் சங்கத்தின் அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. அவரது வருமானத்தை நிரூபிக்க வருமான சான்றிதழ் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை.

எனது மகனின் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்தால் அவரது உண்மையான வயது தெரிந்துவிடும் என்றால் சரிதான். நீதிமன்றம் கோரும்போது தாக்கல் செய்கிறேன். இந்த விபத்தில் எனது மகன் தான் விபத்துக்கு காரணம் தீங்கிழைத்தவர் அதனால் அவரது வாரிசுதாரர்களான நாங்கள் நஷ்ட ஈடு கோர இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்து பாலிசியின் படி எனது மகனுக்கு வாகன ஓட்டுனராக coverage இல்லாத காரணத்தினால் மேற்படி மனுவினை 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் எனது மகன் இறப்பிற்கு மேற்படி காப்பீட்டு பாலிசியை வைத்து Personal accident coverage கோரி விண்ணப்பம் தாக்கல் செய்தோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கோரிய வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனது மகன் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. அவர் அணிந்து தான் சென்றிருந்தால் அவருக்கு தலையில் காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.